சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் மருதூர் கிராமத்தில் தென்கரை கால்வாய் மைல் 16/2 + 340 உள்ள டிராப்பை ரெகுலேட்டராக மாற்றியமைக்கும் பணி – ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் மேற்கொள்ளுதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்.2) துறை

அரசாணை (நிலை) எண்.151 நாள். 05.08.2009.

படிக்க:-

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் கடித எண். எப்.9000/2008, நாள். 20.01.2009.

------

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத்துறையின் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் மருதூர் கிராமத்தில் தென்கரை கால்வாய் மைல் 16/2+340 உள்ள டிராப்பை ரெகுலேட்டராக மாற்றியமைக்கும் பணியை ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. இப்பணிக்காக தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:-

மாயனூர் கிராமத்தில் உள்ள கட்டளை படுக்கை அணையிலிருந்து தென்கரை கால்வாய் பிரிகிறது என்றும் இக்கால்வாயின் நீளம் 18 மைல் 5 பர்லாங் ஆகும் என்றும் இக்கால்வாயினால் பயன்பெறும் பாசன பரப்பு 7136 ஏக்கருக்கு மேல் ஆகும் என்றும் கால்வாயின் படுக்கை மட்டமானது கிளைவாய்க்கால்களின் படுக்கை மட்டத்தைவிட 0.60 மீட்டர் வரை தாழ்வாகவுள்ளது எனவும், ஆகவே மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடாத காலங்களில் டிராப்பின் குறுக்கே மரப்பலகைகள் கொண்டு தண்ணீர் மட்டத்தினை உயர்த்தி பாசனத்திற்கு நீர் வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தென்கரை வாய்க்காலில் நெடுகை 11/4 முதல் 18/2 வரை 5 டிராப்கள் உள்ளன என்றும் இதனில் நெடுகை மைல் 14/12 + 600 மற்றும் மைல் 15/0 + 440இல் உள்ள டிராப்கள் திருகு பலகை அமைப்புடன் நல்ல நிலையில் உள்ளது என்றும் நெடுகை மைல் 16/12 + 340 உள்ள டிராப்பின் மேல்புறம் ஏழு வாய்க்கால்கள் மூலம் 632.82 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது என்றும் தென்கரை வாய்க்காலில் போதுமான நீர்ஓட்டம் இல்லாத காலங்களில் நீர்பங்கீடு செய்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது என்றும் நீர்பங்கீட்டிலுள்ள மேற்காணும் சிரமங்களை களைவதற்கு மேற்குறிப்பிட்ட டிராப்பை நீர் ஒழுங்கியாக மாற்றுவது அத்தியாவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009–2010ஆம் ஆண்டில் ரூ.27.00 இலட்சம் ஆகும் எனவும், இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர், அவர்களால் செயலாக்கப்படும் எனவும், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் மருதூர் கிராமத்தில் தென்கரை கால்வாய் மைல் 16/2 + 340 உள்ள டிராப்பை ரெகுலேட்டராக மாற்றியமைக்கும் பணிக்கு ரூ.27.00 இலட்சங்கள் (ரூபாய் இருபத்தி ஏழு இலட்சங்கள்) மட்டும் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த பணி செலவுத் தொகையில் (Work Estimate) 2.5% க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:-

"4702–00 – சிறு பாசனம் குறித்த மூலதனச்செலவு 101 – மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – JA சிறுபாசன சிறப்புத் திட்டம் – 16, பெரும்பணிகள்" (ததொகு F 4702-00-101-JA 1607).

5. தலைமைப்பொறியாளர், (திருச்சி மண்டலம்) அவர்கள் மேற்கண்ட திட்டத்தை உடனடியாக செயல்படுத்தவும் குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.32855/PW.II/09 நாள். 19.6.2009 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப்பொறியாளர்,
(நீர்வள ஆதாரத்துறை) (ம), தலைமைப்பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத்துறை),
திருச்சி மண்டலம், திருச்சி –20.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சென்னை–5.
நகல்கள்
பொதுப்பணித்துறை ஐபெஷல் பிரிவு, சென்னை–9.
நிதி(பொ.ப.II/வ.செ.பொ.II)த்துறை, சென்னை–9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35.
அனைத்துப் பாசனப் பிரிவுகள், சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.